APRIL/MAY 2024

DTA42/GTA42 — தொல்காப்பியம் - பொருளதிகாரம்-2

Time : Three hours Maximum : 75 marks

SAMBHRAM INSTITUTE OF TECHNOLOGY ARTS & SCIENCE COLLEGE LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் குறுகிய விடையளி.

1. நகை தோன்றுவதற்குரிய நிலைக்களன்களைக் குறிப்பிடுக.

2. வெறுப்ப வந்த வெகுளி நான்காவன யாவை?

3. உவமையின் பாகுபாடுகள் யாவை?

4. ஓரீஇக் கூறலும் மரீஇய பண்பே-விளக்குக.

5. இயலிசை முதலிரண்டு ஏனையவை உரியசை விளக்கம் தருக.

6. கூன் என்றால் என்ன? சான்று தருக.

7. உரைநடையின் நான்கு வகைகள் யாவை ?

8. பயன் என்பதற்கு விளக்கம் தருக.

9. நரியும் அற்றே நாடினார் கொளினே-விளக்குக.

10. ஏறு என்றும் பெயர் பெறும் விலங்குகள் யாவை ?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) ஆயிரு நான்கே அழிவில் கூட்டம் விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவன், தலைவியர்க்குரிய ஆகா குணங்களை விளக்குக.

12. (அ) பயனிலை உவம உருபுகளைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அகமாந்தர்கள் உவமை கூறும் முறையினைப் புலப்படுத்துக.

13. (அ) தொல்காப்பியர் குறிப்பிடும் அசை வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐவகை அடிகள் பற்றிய கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

14. (அ) பாக்களுக்குரிய ஓசைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வெண்பா யாப்பில் வரும் செய்யுட்களை விளக்கி சான்று தருக.

15. (அ) அரசர்க்கும், குறுநில மன்னர்க்கும் உரியவை யாவை?

(அல்லது)

(ஆ) ஈர்ஜங் குற்றங்கள் யாவை? விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடைத்தருக.

16. எண்வகை மெய்ப்பாடுகளுக்குரிய நிலைக்களன்களை விளக்கிச் சான்று தருக.

17. பலவகை அணிகள் தோன்ற உவமையே அடிப்படை என்பதை உவமையியல் வழியில் புலப்படுத்துக.

18. தொல்காப்பியரின் சீர் கோட்பாட்டை விவரி.

19. எண்வகை வனப்புகளை விளக்கிக் கட்டுரை வரைக.

20. இளமைப் பெயர்களையும் அவற்றிற்குரிய உயிரினங்களையும் தக்க சான்றின் வழி நிறுவுக.

———————